MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU. R. ARUL ROUGH STONE & GRAVEL QUARRY, OVER AN EXTENT OF 2.28.50 HA AT SF.NO. 965/1A, 965/1B, 965/1C, 965/1D, 965/2A1 & 965/2B1 AT MARUTHADU VILLAGE, VANDAVASI TALUK, TIRUVANNAMALAI DISTRICT ON 24.02.2026 AT 11.00 AM AT M/s. A.J. THIRUMANA MAHAL, MARUTHADU VILLAGE, VANDAVASI TALUK, TIRUVANNAMALAI DISTRICT.

Present:

1	Selvi.L. Ambica Jain I.A.S.,	:	Sub Collector, Cheyyar division Tiruvannamalai. (Representative of the District Collector, Tiruvannamalai)
2	Er. A. Jothi Prakash	:	District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
3	Dr. S. Sugashini	:	Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
4	Er. K. Prem Kumar	:	Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
5	Thiru. P. Jayavel	:	Tahsildar, Vadavasi Taluk, Tiruvannamalai.
6	Thiru. D. Elavarasan	:	Inspector of Police, Kilkodungalore Police Station, Tiruvannamalai.
7	Thiru.R. Arul	:	The Proponent, M/s. R. Arul Rough Stone & Gravel Quarry.
8	Thiru. Vijayaraghavan	:	Environmental Impact Assessment (EIA) Consultant, M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri.
9	Public	:	74 Nos. (Attendance enclosed as Annexure).

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, welcomed the Sub Collector, Cheyyar division, Tiruvannamalai, the general public, Revenue officials, Police department officials, Media persons and the proprietor of M/s. R. Arul, Rough Stone and Gravel Quarry who had assembled

for the public hearing in connection with obtaining Environmental Clearance for the proposed Rough Stone and Gravel Quarry of M/s. R. Arul. He further pointed out that prior notification regarding the conduct of this public hearing had already been published on 21.01.2026 in the Tamil and English daily newspapers, namely "Dinamalar" and "The New Indian Express." He also informed that public announcements had been made in and around Maruthadu Village through loudspeakers and distribution of pamphlets.

He further stated that, on behalf of the proponent of the proposed Rough Stone and Gravel Quarry project, their project consultant would present a detailed explanation of the project to the public, following which the public may give their views, suggestions, doubts, and seek clarifications regarding the project, and that all such event would be video graphed and audio recorded, and the minutes and records of this meeting would be forwarded to the State Environment Impact Assessment Authority-Tamil Nadu (SEIAA-TN).

The Sub Collector, Cheyyar division, inaugurated the public hearing meeting and requested the proponent (M/s. R. Arul) of the proposed Rough Stone and Gravel Quarry, to present the detailed explanation regarding the proposed quarry project.

Thiru.K. Vijayaraghavan, Environmental Impact Assessment Consultant of M/s. R. Arul Rough Stone and Gravel Quarry project from M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri, welcomed all those who had assembled for the public hearing meeting and delivered a detailed power point presentation explaining the operational aspects of the Rough Stone and Gravel Quarry project and the Environmental Management Plan to be implemented during its operation.

Following the above presentation, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, announced that the public may express their views. He further requested that, before recording their views, the public should mention their name and their village name, before expressing their opinions.

Accordingly, the following public expressed their views and suggestions.

1. Thiru. Vedhagiri Kallanguthu Panchayat, Kaveripakkam Village:

Thiru. Vedhagiri conveyed his greetings to all the members of the public who had attended the public hearing meeting and to the Government officials present. He stated that the meeting was convened to obtain public opinion regarding the proposed stone quarry and that there are both advantages and disadvantages associated with it. He informed that a stone quarry is already functioning in Maruthadu, which falls under Kallanguthu Panchayat of Maruthadu Revenue Village. He stated that the present meeting has been conducted to seek permission for establishing another stone quarry in the area. He expressed that the proposed approach road for the quarry is not clearly known to them. He further stated that a large number of farmers from their village are residing near the proposed quarry site, and the specific measures to safeguard them are not known. He mentioned that although the exact route for the movement of lorries is unclear, there is apprehension that their Panchayat may be significantly affected. While it is stated that the project would bring development to the village, he emphasized that the safety of human life is invaluable. He stated that the road connecting Kallukkulamedu village to Nandhamangalam Road is very narrow and allows only single-vehicle passage in certain stretches, and that he himself has faced difficulties while using it. Though it is stated that a stone quarry is to be established, the details of the access route are not clear. He said that since there are many children in our village of Kallukkalamedu, there is a possibility that they will be affected. Hence, he requested that a safe transportation route be provided. He also raised a query as to whether the authorities would properly inspect and monitor the assurance given regarding regular water sprinkling on the roads used by lorries? He stated that though revenue generation is being cited as a benefit, but during the formation of the National Highway earlier, permission from Kallanguthu Panchayat had not been obtained. He requested that necessary measures be taken to ensure that no loss of life or damage to agricultural lands occurs. He said he didn't know if the opinion he had expressed would be accepted; however, he had recorded his opinion.

2. Thiru. Palani M.G.R. Nagar, Kallanguthu Village:

Thiru. Palani stated that the views expressed by the brother (the one who spoke before) were good, but questioned whether he knows how many families are earning their livelihood?. He stated that he may not be aware of how many families are dependent on it?. He further stated that road works would be carried out by them to control pollution. He expressed his opinion that a quarry could be established to help the many drivers and economically weaker persons survive.

3. Thiru. Arul Pandian, M.G.R. Nagar, Kallanguthu Village:

Thiru. Arul Pandian conveyed his greetings to the members of the public who had attended the public hearing meeting and to the Sub-Collector and the District Environmental Officer present. He stated that the said area is a fertile land yielding three seasons; it is not a hilly area or a hillock. He pointed out that all the lands surrounding the proposed stone quarry are agricultural lands. He further stated that the people here only know agriculture; they don't know about the job like cutting stones with explosives works. He questioned why permission is being granted for a stone quarry in a region surrounded by agricultural lands?. He specifically expressed concern that there is a risk of groundwater pollution. He stated that if permission is granted for one quarry, it may be taken as a precedent and other quarries may easily seek approval thereafter, and subsequently there may be no necessity for further public hearings. He stated that under the name of environmental protection, assurances are being given that trees will be planted around the quarry and mineral funds will be provided to the Panchayat; however, such measures are not required for people who depend solely on agriculture for their livelihood. He mentioned that Maruthadu means the land which yielding three seasons. One of the largest lake in Tamil Nadu is located in Maruthadu village. He stated that this lake serves as the source of irrigation for three-season agricultural cultivation. He further stated that instead of conducting a public hearing for quarry activities, it would be better to conduct meetings for welfare schemes such as road

formation, provision of irrigation facilities to agricultural lands, construction of water storage structures, and excavation or renovation of ponds. He submitted to the District Collector, Sub-Collector, and Environmental Authorities that they are aware of the applicable laws and that there is no law unknown to them. He requested that a polluting quarry of this nature should not be permitted in their village. He stated that measures such as planting saplings, repairing roads, and sprinkling water would be like applying a bandage to a wound. He concluded by respectfully requesting that if any benefit is intended for their village, permission for the said stone quarry should not be granted.

4. Thiru. Anandhan, Former Panchayat Ward Member, Viduthalai Chiruthaigal Katchi Youth Action Wing District Organizer, Maruthadu Village:

Thiru. Anandhan conveyed his greetings to the Government officials who had attended the public hearing meeting and to the members of the public from Kallakuthu, Kaveripakkam, and Maruthadu villages. He stated that there are numerous needs of the people; however, such meetings are not conducted for addressing those needs. He questioned why such a large meeting is being conducted for the benefit of a private entrepreneur? He further questioned on whose livelihood the Government officials — whether the District Collector, Sub-Collector, or Environmental Engineer — are extending their support? He stated that sand and stone quarries pose significant dangers. He questioned what the people truly require? and stated that not only agricultural lands but also pollination would be affected. He expressed that blasting operations would cause vibrations in houses and that if blasting occurs during night hours, children would not be able to sleep. He further stated that there is a risk of respiratory illnesses such as asthma and even heart attacks. He questioned as to whom the stated benefits would accrue? and expressed that the benefits would be limited only to the quarry operators. He stated that while regulations may be followed initially, profit motives would eventually prevail. He requested that the people should reject such projects and stated that if the Government continues to extend cooperation, the people of the area, irrespective of caste or religion, should unite and oppose the project. He

stated that such quarries should be completely abolished and that there should not even be a public consultation. He questioned who would benefit from the quarry? stating that only the quarry owners would gain profit. While drivers and stone breakers may receive wages, he questioned what benefit others would receive? He asked whether establishing a stone quarry would bring water for agriculture? or increase agricultural land? and whether it would benefit a farmer owning 10 acres? He also questioned whether schools or colleges would derive any benefit? He alleged that full information regarding the quarry proposal had not been properly communicated to all the villagers and that only a few had been informed. He stated that there are four or five villages surrounding the proposed site; however, more than 400 people have not attended the meeting as they were not informed. He stated that his residence is located only 600 metres from the proposed site and that he came to know about the public hearing now only, and had to leave his work urgently to attend the meeting. He questioned whether the Government officials were unaware of the risks involved? He concluded by stating that the quarry should be completely prevented; otherwise, the people would be compelled to initiate protests. He emphasized that, considering the welfare of future generations, the project should be collectively opposed.

5. Thiru. Sakthivel, Viduthalai Chiruthaigal Katchi Youth Action Wing Union Secretary, M.G.R. Nagar, Kallanguthu Village:

Thiru. Sakthivel stated that the meeting is said to be a public hearing to obtain the views of the general public; however, he questioned whether proper information regarding the meeting had been duly communicated to the public? He stated that he resides in the M.G.R. Nagar area and that no information regarding the meeting had been provided to their locality. He further mentioned that even residents belonging to the Kaveripakkam area were not aware of the meeting. He questioned whether it is appropriate to conduct the meeting under such circumstances. He stated that, first, it should be clearly explained what benefits the general public would receive from the proposed stone quarry. He expressed that if the quarry is established, the groundwater level would decrease and water would

not be available for the surrounding agricultural lands. He stated that the quarry would not bring any benefit and that there are no alternative livelihood measures for the people affected by such a project. Therefore, he requested the authorities not to grant permission for the stone quarry, considering the welfare of the general public.

6. Thiru. Sugisivam, Maruthadu Village:

Thiru. Sugisivam conveyed his greetings to all present. He stated that the land situated near the proposed quarry site belongs to him. However, he informed that no information had been communicated to him regarding the public hearing to establish the quarry at that location. He stated that he and his family depend entirely on agriculture for their livelihood. He expressed that if the quarry is established, he would be completely affected. He stated that if excavation is carried out, cultivation would not be possible and there would be no water in the well. He informed that he owns 10 acres of land and that his entire family depends solely on agriculture. He further mentioned that the previously established quarry has already caused impact. He questioned that although it is now being stated that roads would be laid, whether the Government had not constructed roads earlier, and whether only now such works are being undertaken? He questioned whether, among those present at the meeting, there were any persons owning land near the quarry site, whether only neighbouring cultivators were present? and whether residents of the same village were present. He stated that many participants appeared to be from areas located five to ten kilometres away. He clarified that he was speaking only about the quarry that is proposed to come and not about any quarry that had already been established, and that he was expressing only his grievance. He stated that livelihood is possible only through cultivation. He mentioned that one may go for employment for two years, but after two years there would be a situation where one would have to return home. He stated that he does not have adequate access facilities. The proposed quarry is to be located behind his agricultural field, and no information had been given to him in this regard. He stated that assurances such as "we will do this and that" are being given, but nothing has been done for them. He expressed that cultivation is possible only if agricultural land is available and

accessible, and that there is no sufficient access pathway. Even through the existing pathway, proper access is not available, and they are presently using a path provided by neighbouring cultivators. He questioned how access routes are available only for the quarry operators?. He stated that in any event, the quarry would affect their agriculture. He requested the authorities to visit the site and inspect the situation before granting permission and requested that permission should not be granted. He concluded by stating that if permission is granted, they would be left in a helpless situation and reiterated that approval should not be given for the proposed quarry.

7. Thiru. Murugesan, Maruthadu Village:

Thiru. Murugesan conveyed his morning greetings to the members of the public present, and to the Sub-Collector and the District Environmental Engineer. He stated that they were not aware of when the stone quarry had been planned. He mentioned that they are residing in the ADC Colony area of Maruthadu Village, but no information regarding the proposed quarry had been communicated to them. He further stated that M.G.R. Nagar, located at a distance of about half a kilometre, is also a residential colony, and that no information had been given to them either. He stated that they were unaware of the nature of the meeting and came to know about it only after seeing the banner displayed outside. He questioned why information had not been communicated to them and asked whether they are not human beings and whether they do not have agricultural lands? He stated that there are Panchami lands measuring about 10 to 15 acres in the surrounding area, and that there are no motor pumps or wells provided for those lands. He described the area as rain-fed land. He questioned how agriculture could be carried out if the quarry is established in the area, and how crops such as groundnut and millets could be cultivated and developed? He asked whether such information should not have been conveyed to them. He pointed out that the Kallanguthu School is located at a road junction and questioned how children would safely reach the school, as it is a narrow road. He stated that after the formation of the bypass road, about 10 accidents had occurred, resulting in 10 fatalities. He questioned the extent of impact on the residents if

quarry vehicles were to operate frequently throughout the day. He stated that the establishment of the quarry would affect groundwater and the environment. He expressed that the quarry is not necessary and that no one would derive stable livelihood or permanent income from it. He further stated that future generations would be affected. He concluded by stating that irrespective of their present condition, the welfare of future generations is important, and that the quarry is not required. He further stated that if the quarry is established despite their objections, they would undertake appropriate protest measures to the extent possible.

8. Thiru. Lakshmanan, Punnai Village:

Thiru. Lakshmanan stated that they depend entirely on agriculture for their livelihood and that from sunrise to sunset, agriculture is their very lifeline. He conveyed his greetings to the Government officials and the members of the public who had participated in the meeting. He stated that their occupation is agriculture and that Maruthadu is a fertile village comparable to Mamadurai. He described Maruthadu as a fertile riverbank region and stated that even a small amount of pollution would cause distress to the people. He mentioned that they are not aware of who had sought permission for establishing a stone quarry in this area and acknowledged that it was their mistake not to have taken note of it earlier. He stated that if loss of life occurs due to pollution, it is the people themselves who would be affected, and that human life is invaluable. He expressed concern that there is a risk of stones falling on school-going children and that it is not known how or when such incidents might occur. He questioned whether such a quarry is necessary? stating that there is a possibility of loss of many children's lives. He stated that there should be no pollution in a village like Maruthadu and that the quarry should not be permitted. He mentioned that many lives have already been lost and that such incidents cause deep distress. He questioned whether the quarry is truly necessary? He urged those present to respond, stating that a sound will not arise from a single hand clap, but only when 100 peoples join together. He further stated that many assurances had been given initially, such as promises to undertake certain works; however, those assurances were not implemented in practice. He

concluded by stating that the proposed quarry is not required for Maruthadu village.

9. Thiru. M.D. Radhakrishnan, Former Panchayat President, Maruthadu Village:

Thiru. M.D. Radhakrishnan stated that he is the former President of Maruthadu Panchayat and had served continuously for about 35 years from 1986 onwards. He further stated that even after the Panchayat was dissolved, he had served as the Vice-President. He mentioned that his wife had served twice as a Union Councillor. He stated that he is well aware of the deficiencies and requirements in every part of the village and that he has been continuously involved in the administration of the village from a young age. On that basis, he expressed his views. He stated that some of the points raised by the respected speakers are acceptable and that necessary alternative arrangements can be made. At the same time, he expressed that the quarry is necessary for the village. He stated that for constructing houses, laying roads, or carrying out other construction works, materials have to be procured from distant places, resulting in higher expenditure and delay. Availability of such materials locally would help avoid these difficulties. He further stated that the quarry has been functioning for about one and half years and that no complaints have been brought to his notice so far. To his knowledge, no major impacts have occurred. He mentioned that about ten acres of land in the quarry area had belonged to him and that he had provided the same. He stated that the land was entirely dry land. He also mentioned that there are agricultural lands nearby and that persons from Kallanguthu and Kaveripakkam areas also own lands in that region. However, he stated that no significant impact has been noticed so far. He emphasized that the concerns raised by the public must be taken into consideration. The nature of quarry operations and the manner in which they function should be properly explained. He suggested that measures such as regulating transportation, reducing blasting noise levels, and controlling dust should be implemented. He requested that the quarry operators ensure that no harm is caused to the public. He concluded by stating that the demands placed by the public should be reconsidered and that a decision acceptable to all should be taken.

He thanked the authorities for providing the opportunity to speak and concluded his address.

10. Tmt. Sumathi, Mathimangalam Village:

Tmt. Sumathi stated that she had come from Mathimangalam Colony. She stated that now everyone is saying that the stone quarry is not required; however, if the quarry is present, employment opportunities will be available to them. As employment would be available nearby, there would be no necessity to travel four kilometres for work. She also said that a quarry is needed for employment.

(During her speech, there was murmuring in opposition from the public. Hence, the Assistant Engineer informed that if members of the public wish to express their views, they may come forward and express them, and that no one should interrupt when others are expressing their opinions.)

Thereafter, Tmt. Sumathi stated that sand is required for constructing houses and questioned whether houses are being built without sand. She stated that, if needed, materials are being brought from some quarry or the other, and asked that it be considered that such materials are available from our own nearby area. Therefore, she stated that this quarry is required for her.

After that, No representation continued from the public for providing comments.

As no members of the public came forward to continue expressing their views, the Sub Collector, Cheyyar Division, Tiruvannamalai, directed that the public hearing meeting be concluded, and accordingly, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai declared that the public hearing meeting had concluded.

Furthermore, regarding the proposed Thiru. R. Arul Rough Stone and Gravel Quarry Project, a total of 09 written petitions were received from the public, while no petitions were received directly or via email at the office of the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

A-Jothiprakash
6/3/26

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Tiruvannamalai.

6/3/26

Sub Collector,
Cheyyar Division,
Tiruvannamalai.

District Collector,
Tiruvannamalai.

3

உத்தேசிக்கப்பட்ட தி/ள். R. அருள், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, புல எண்கள். 965/1A, 965/1B, 965/1C, 965/1D, 965/2A1 & 965/2B1, மருதாடு கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் 2.28.50 ஹெக்டர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 24.02.2026 அன்று மருதாடு கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். A.J. திருமண மஹால் திருமண மண்டபத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:

பங்கேற்றோர்:

1	செல்வி.ல.அம்பிகா ஜெயின் இ.ஆ.ப,	:	சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை. (மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் பிரதிநிதி)
2	திரு. அ. ஜோதி பிரகாஷ்	:	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
3	முனைவர். சி. சுகாஷினி	:	உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
4	திரு. க. பிரேம் குமார்	:	உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
5	திரு. பா. ஜெயவேல்	:	வட்டாட்சியர், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை.
6	திரு. D. இளவரசன்	:	காவல் ஆய்வாளர், கீழ்கொடுங்கலூர் காவல் நிலையம், திருவண்ணாமலை.
7	திரு. R. அருள்	:	உரிமையாளர் தி/ள். R. அருள், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி.
8	திரு. K. விஜயராகவன்	:	சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி.
9	பொதுமக்கள்	:	74 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது)

தி/ள். R. அருள், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை, பொதுமக்கள், வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிகை நண்பர்கள் மற்றும் தி/ள். R. அருள், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினமலர் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 21.01.2026 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், மருதாடு கிராம சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் உரிமையாளர் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை தெரிவிக்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்து,

உத்தேசிக்கப்பட்டுள்ள (தி/ள். R. அருள்), சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அவர்களை விளக்கவுரையை வழங்க அழைத்தார்.

தி/ள். R. அருள், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. K. விஜயராகவன், தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, கீழ்க்கண்ட பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

1. திரு. வேதகிரி, கல்லாங்குத்து ஊராட்சி, காவேரிப்பாக்கம் கிராமம்:

திரு. வேதகிரி அவர்கள் கூறுகையில், இக்கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள பொதுமக்கள் அனைவருக்கும் மற்றும் வருகை புரிந்துள்ள அரசு அலுவலர்களுக்கும் தனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார். கல் குவாரி தொடர்பாக கருத்து கேட்க நடைபெறும் கூட்டத்திற்கு அனைவரும் வந்துள்ளீர்கள்; இதில் சாதகமும் பாதகமும் உள்ளன என்றார். மருதாடு வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட கல்லாங்குத்து ஊராட்சியில் ஏற்கனவே எங்கள் ஊராட்சியான மருதாடு பகுதியில் ஒரு கல்குவாரி செயல்பட்டு வருகிறது. தற்போது மேலும் ஒரு கல்குவாரி அமைக்க அனுமதி வழங்க வேண்டி இந்தக் கூட்டம்

நடைபெறுகிறது என தெரிவித்தார். கல்குவாரிக்கான வழித்தடம் எவ்வாறு அமைக்கப்படும் என்பது எங்களுக்கு தெளிவாக தெரியவில்லை என்றும், கல்குவாரி அருகில் எங்கள் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் அதிக அளவில் உள்ளனர் என்றும் தெரிவித்தார். அதற்கான நடவடிக்கைகள் என்ன என்பது தெரியவில்லை என்றார். லாரிகள் செல்லும் வழித்தடம் எங்களுக்கு தெளிவாக தெரியவில்லை; ஆனால் எங்கள் ஊராட்சிக்கு பாதிப்பு அதிகம் இருக்கும் என அச்சம் உள்ளது. இதனால் கிராமத்திற்கு முன்னேற்றம் ஏற்படும் என்று கூறினாலும், மக்களின் உயிர் பாதுகாப்பே விலைமதிப்பற்றது என்றார். கல்லுக்குளமேடு கிராமத்திலிருந்து நந்தமங்கலம் சாலைக்கு செல்லும் பாதை மிகவும் குறுகலானது; ஒரு வாகனம் மட்டுமே செல்லக்கூடிய நிலை உள்ளது என்றும், தானும் பலமுறை சிரமம் அனுபவித்துள்ளேன் என்றும் தெரிவித்தார். இவர்கள் கல்குவாரி வருவதாக கூறுகிறார்கள்; ஆனால் வழி எவ்வாறு இருக்கும் என்பது தெரியவில்லை என்றார். எங்கள் கல்லுக்குளமேடு கிராமத்தில் குழந்தைகள் அதிகம் உள்ளதால், அவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்றார். எனவே பாதுகாப்பான வழித்தடம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். லாரிகள் செல்லும் சாலையில் தண்ணீர் தெளிப்போம் என்று கூறப்படுகிறது; அதனை அதிகாரிகள் முறையாக ஆய்வு செய்து கண்காணிப்பார்களா? என கேள்வி எழுப்பினார். வருமானம் கிடைக்கும் என்கிறார்கள்; ஆனால் ஏற்கனவே தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் போது எங்கள் கல்லாங்குத்து ஊராட்சியின் அனுமதி பெறப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். பொதுமக்களுக்கு உயிர் சேதமோ அல்லது விவசாய நிலங்களுக்கு பாதிப்போ ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். நான் கூறிய கருத்து ஏற்கப்படுமா என்பது தெரியாது; இருப்பினும் தனது கருத்தை பதிவு செய்து விட்டேன் என தெரிவித்தார்.

7

2. திரு. பழனி, எம்.ஜி.ஆர். நகர், கல்லாங்குத்து கிராமம்:

திரு. பழனி அவர்கள் கூறுகையில், அண்ணன் (முன்பு பேசியவர்) கருத்து எல்லாம் நன்றாக தான் சொன்னார் அதில் எத்தனை குடும்பம் பிழைக்கிறது என்று அவருக்கு தெரியுமா? எத்தனை குடும்பம் பிழைக்கிறது என்பது அவருக்கு தெரியாது? மாசு கட்டுப்படுத்த சாலை பணிகள் அவர்கள் செய்து தருவார்கள். அது போல் எத்தனை ஓட்டுநர் எத்தனை ஏழை பாழைகள் பிழைப்பதற்கு கல்குவாரி அமைக்கலாம் என்பது தனது கருத்தாக தெரிவிப்பதாக கூறினார்.

3. திரு. அருள் பாண்டியன், எம்.ஜி.ஆர். நகர், கல்லாங்குத்து கிராமம்:

திரு. அருள் பாண்டியன் அவர்கள் கூறுகையில், திரு. அருள் பாண்டியன் அவர்கள் இக்கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள பொதுமக்கள் மற்றும் சார் ஆட்சியர், மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலர் ஆகியோருக்கு தனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்தார். இந்த பகுதி மூன்று போகங்கள் விளையும் நிலமாகும்; இது மலைப்பகுதியோ அல்லது மலைமேடோ அல்ல என்றார். கல்குவாரி சுற்றியுள்ள அனைத்து நிலங்களும் விவசாய நிலங்களே என்றும் குறிப்பிட்டார். இங்கு உள்ள மக்களுக்கு விவசாயம் மட்டுமே தெரியும்; வெடி வைத்து கற்கள் வெட்டுவது போன்ற தொழில்கள் தெரியாது என்றார். விவசாய நிலங்களை சூழ்ந்துள்ள பகுதியில் ஏன் கல்குவாரிக்கு அனுமதி வழங்கப்படுகிறது? என்று வினவினார். குறிப்பாக நிலத்தடி நீர் மாசுபடும் அபாயம் உள்ளது என்றார். ஒரு குவாரிக்கு அனுமதி வழங்கப்பட்டால், அதனை முன் உதாரணமாகக் கொண்டு மற்ற குவாரிகளும் எளிதில் அனுமதி பெற முயற்சிப்பார்கள்; பின்னர் கருத்துக்கணிப்பு தேவையே இருக்காது என்றார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற பெயரில் குவாரி எடுத்து சுற்றிலும் மரம் நடுவோம், ஊராட்சிக்கு கனிம நிதி வழங்குவோம் என்றும் கூறுகிறார்கள்; ஆனால் விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ள மக்களுக்கு அது தேவையில்லை என்றார். மருதாடு என்பது முப்போகம் விளையும் நிலமாகும். தமிழ்நாட்டிலேயே மிகப்பெரிய ஏரி மருதாடு கிராமத்தில் அமைந்துள்ளது என்றும்

குறிப்பிட்டார். இந்த ஏரியில் இருந்து தான் மூன்று போக விவசாயத்திற்கு நீர் பாசனம் செய்யப்படுகிறது என்றார். எங்கள் மக்களுக்கு குவாரி தொடர்பாக கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்துவதற்குப் பதிலாக, சாலை அமைத்தல், விவசாய நிலங்களுக்கு நீர் பாசன வசதி ஏற்படுத்துதல், நீர்த்தேக்கம் கட்டித் தருதல், குளம் வெட்டுதல் போன்ற நலத்திட்டங்களுக்கு கூட்டம் நடத்தினால் சிறந்தது என்றார். மாவட்ட ஆட்சியர், சார் ஆட்சியர் மற்றும் சுற்றுச்சூழல் அதிகாரிகளிடம் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், உங்களுக்குத் தெரியாத சட்டம் எதுவும் இல்லை; தெரிந்த சட்டம்தான். எங்கள் ஊருக்கு இவ்வாறு மாசு ஏற்படுத்தும் குவாரி வேண்டாம். வெடி சத்தம் இல்லாமல் மரக்கன்றுகள் நட்டு, சாலை சீரமைத்து, நீர் தெளிப்பது போன்றவை காயத்திற்கு ஒட்டுப்போடுதல் போல ஆகும் என்றார். எங்கள் ஊருக்கு ஏதேனும் நன்மை செய்ய விரும்பினால், இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டாம் என மிகவும் பணிவுடன் கேட்டுக் கொண்டார்.

4. திரு. ஆனந்தன், முன்னாள் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர், விடுதலை சிறுத்தைகள் கட்சி இளைஞர் செயற்பாட்டு பாசறை மாவட்ட அமைப்பாளர், மருதாடு கிராமம்:

திரு. ஆனந்தன் அவர்கள் கூறுகையில், இக்கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அரசு அதிகாரிகள் மற்றும் கல்லாக்குத்து, காவேரிப்பாக்கம், மருதாடு கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவருக்கும் தனது வணக்கத்தை தெரிவித்தார். மக்களின் பல்வேறு தேவைகள் எவ்வளவோ உள்ளன; ஆனால் அதற்காக இவ்வாறு கூட்டங்கள் நடத்தப்படுவதில்லை. ஒரு தனியார் முதலாளிக்காக இவ்வளவு பெரிய கூட்டம் நடத்தப்படுவது ஏன்? என கேள்வி எழுப்பினார். ஆட்சியர் ஆகட்டும், சார் ஆட்சியர் ஆகட்டும், சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகட்டும் – யார் வாழ்வதற்காக அரசு அதிகாரிகள் துணை நிற்கிறார்கள்? என்று வினவினார். மண் மற்றும் கல் குவாரிகளால் பெரும் ஆபத்துகள் ஏற்படுகின்றன என்றார். மக்களுக்கு உண்மையில் எது தேவை?

விவசாய நிலங்கள் மட்டுமின்றி, மகரந்தச் சேர்க்கையும் பாதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். வெடி வெடிப்புகளால் வீடுகளில் அதிர்வு ஏற்படும்; இரவு நேரங்களில் வெடிப்புகள் நடைபெற்றால் குழந்தைகள் தூங்க இயலாது என்றார். ஆஸ்துமா உள்ளிட்ட சுவாச நோய்கள் மற்றும் மாரடைப்பு ஏற்படும் அபாயம் உள்ளது என்றும் குறிப்பிட்டார். இவர்கள் கூறும் நன்மைகள் யாருக்காக? அவர்களுக்கு மட்டுமே என்று தெரிவித்தார். ஆரம்பத்தில் விதிமுறைகள் பின்பற்றப்பட்டாலும், பின்னர் லாப நோக்கமே மேலோங்கும் என்றார். இதனை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்றும், மீண்டும் அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கினால் இங்குள்ள மக்கள் சாதி, மத வேறுபாடுகளை மீறி ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இவ்வாறான குவாரிகளை முற்றிலும் ஒழிக்க வேண்டும்; கருத்துக்கணிப்பே இருக்கக் கூடாது என்றார். இந்த குவாரியால் யாருக்கு நன்மை? குவாரி உரிமையாளர்களுக்கு மட்டுமே லாபம். ஓட்டுநர்களுக்கு சம்பளம் கிடைக்கலாம்; கல் உடைப்பவர்களுக்கு சம்பளம் கிடைக்கலாம்; ஆனால் மற்றவர்களுக்கு என்ன நன்மை இருக்கிறது? என்று கேள்வி எழுப்பினார். கல்குவாரி அமைப்பதால் விவசாயத்திற்கு தண்ணீர் வருமா? விவசாயிகளுக்கு நிலம் அதிகரிக்குமா? 10 ஏக்கர் விவசாயிக்கு நன்மை ஏற்படும் என்று சொல்ல முடியுமா? பள்ளி, கல்லூரிகளுக்கு ஏதேனும் நன்மை உண்டாகுமா? என்று வினவினார். குவாரி அமைப்பதற்கான தகவல் முழுமையாக ஊர் மக்களுக்கு தெரிவிக்கப்படவில்லை; சிலருக்கு மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் குற்றம் சாட்டினார். இந்த குவாரியைச் சுற்றி நான்கு அல்லது ஐந்து கிராமங்கள் உள்ளன; ஆனால் 400-க்கும் மேற்பட்ட மக்கள் இங்கு வரவில்லை. எங்களுக்கெல்லாம் தகவல் தெரிவிக்கப்படவில்லை. இங்கிருந்து 600 மீட்டர் தொலைவில் தான் எங்கள் வீடு உள்ளது; எங்களுக்கே இப்போது தான் தெரிய வருகிறது. அவசரமாக வேலையை விட்டுவிட்டு வந்துள்ளோம் என்றார். இதனால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து அரசு அதிகாரிகளுக்கு தெரியாதா? என்று

வினவினார். எனவே, இக்குவாரியை முற்றிலும் தடுக்க வேண்டும்; இல்லையெனில் மக்கள் தாமாகவே போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும் என்றார். அடுத்த தலைமுறையினரின் நலனை கருத்தில் கொண்டு, இத்திட்டத்தை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

5. திரு. சக்திவேல், விடுதலை சிறுத்தைகள் கட்சி இளைஞர் செயற்பாட்டு பாசறை ஒன்றிய செயலாளர், எம்.ஜி.ஆர். நகர், கல்லாங்குத்து கிராமம்:

திரு. சக்திவேல் அவர்கள் கூறுகையில், இது பொதுமக்கள் கருத்து கேட்கப்படும் கூட்டம் எனக் கூறப்படுகிறது; ஆனால் அதற்கான தகவல் பொதுமக்களுக்கு முறையாக அறிவிக்கப்பட்டதா? என்று கேள்வி எழுப்பினார். தான் எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் வசித்து வருகிறேன்; ஆனால் எங்கள் பகுதிக்கு இதுவரை எந்த தகவலும் வழங்கப்படவில்லை என்றார். காவேரிப்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் தகவல் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார். இவ்வாறு இருக்கையில் கூட்டம் நடைபெறுவது சரியானதா? என்று வினவினார். முதலில் இக்கல்குவாரியால் பொதுமக்களுக்கு என்ன நன்மைகள் ஏற்படுகின்றன என்பதை விளக்க வேண்டும் என்றார். குவாரி அமைந்தால் நிலத்தடி நீர் குறையும்; சுற்றியுள்ள விவசாய நிலங்களுக்கு நீர் கிடைக்காது என்று தெரிவித்தார். இந்த குவாரியால் எவ்வித பயனும் இல்லை; மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் திட்டத்திற்கு மாற்று வாழ்வாதார வழிகள் எதுவும் இல்லை என்றும் கூறினார். எனவே, பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு கல்குவாரிக்கு அதிகாரிகள் அனுமதி வழங்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

6. திரு. சுகிசிவம், மருதாடு கிராமம்:

திரு. சுகிசிவம் அவர்கள் கூறுகையில், அனைவருக்கும் வணக்கம் தெரிவித்தார். அமைக்கப்பட உள்ள குவாரிக்கு அருகில் உள்ள நிலம் தமக்கு சொந்தமானது என்று தெரிவித்தார். இருப்பினும், இக்குவாரி அங்கு அமைக்கப்பட

இருப்பதாக எந்த தகவலும் தமக்கு தெரிவிக்கப்படவில்லை என்றார். தாங்கள் முழுமையாக விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகிறோம் என்றார். குவாரி அமைக்கப்பட்டால் தமக்கு முழுமையாக பாதிப்பு ஏற்படும். அவர்கள் பள்ளம் எடுத்தால் பயிர் வைக்க முடியாது; கிணற்றில் தண்ணீர் இருக்காது என்றும் தெரிவித்தார். தமக்கு 10 ஏக்கர் நிலம் உள்ளது; தமது குடும்பம் முழுவதும் விவசாயத்தை நம்பியே வாழ்கிறது என்றார். இதற்கு முன் அமைக்கப்பட்ட குவாரியால் ஏற்கனவே பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். சாலைகள் அமைத்து தருவதாக கூறப்பட்டாலும், இதற்கு முன்பு அரசு எந்த சாலையும் அமைக்கவில்லையா? இப்போது இவர்கள் வந்து தான் நல்லது செய்கிறார்களா? என்று கேள்வி எழுப்பினார். இந்த கூட்டத்திற்கு வந்திருக்கும் இவ்வளவு பேரில், குவாரி அருகில் நிலம் வைத்திருப்பவர்கள் யாராவது இருக்கிறார்களா? என்று வினவினார். பக்கத்து கழனிக்காரர்கள் யாராவது இருக்கிறார்களா? இந்த ஊரில் உள்ளவர்கள் இருக்கிறார்களா? என்று கேள்வி எழுப்பினார். ஐந்து அல்லது பத்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்களே அதிகமாக கலந்து கொண்டுள்ளனர் என்றார். எந்த குவாரி வருகிறதோ, அந்த குவாரியைப் பற்றித்தான் நான் பேசிக் கொண்டு இருக்கிறேன்; ஏற்கனவே உள்ள குவாரியைப் பற்றி நான் பேசவில்லை. என் குறையைத்தான் நான் சொல்கிறேன் என்று ஆதங்கப்பட்டார். பயிர் வைத்தால்தான் பிழைக்க முடியும். இரண்டு வருடம் வேலைக்கு போக முடியும்; இரண்டு வருடத்தில் வீட்டிற்கே திரும்பி வர வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவித்தார். தமக்கு போதுமான வழி வசதி இல்லை. தற்போது வர உள்ள குவாரி தமது கழனிக்கு பின்னால் தான் வருகிறது; இதைப் பற்றி தமக்கு யாரும் தெரிவிக்கவில்லை என்றார்."அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம்" என்று கூறுகிறார்கள்; ஆனால் எங்களுக்கு எதுவும் செய்யவில்லை என்றார். கழனி இருந்தால் தான் பயிர் வைக்க முடியும்; போதுமான வழி வசதி இல்லை. ஏற்கனவே உள்ள பாதையில் செல்ல வழி இல்லை; கழனிக்காரர்கள் விட்ட வழியில் தான் வந்து

கொண்டிருக்கிறோம். இவர்களுக்கு மட்டும் எப்படி வழி உள்ளது என்று கேள்வி எழுப்பினார். எப்படிச் சென்றாலும், இக்குவாரி எங்கள் விவசாயத்தை பாதிக்கிறது. நீங்கள் வந்து பார்த்தால் உங்களுக்கு தெரியும்; வந்து பார்த்து அனுமதி வழங்க வேண்டாம் என்றார். அனுமதி வழங்கினால், நாங்கள் பள்ளத்தில் விழுந்து தான் சாக வேண்டிய நிலை வரும் எனக் கூறி, இக்குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது என தெரிவித்தார்.

7. திரு. முருகேசன், மருதாடு கிராமம்:

திரு. முருகேசன் அவர்கள் கூறுகையில், இக்கூட்டத்திற்கு வருகை தந்துள்ள பொதுமக்கள், சார் ஆட்சியர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோருக்கு தனது வணக்கத்தை தெரிவித்தார். கல்குவாரி எப்போது திட்டமிடப்பட்டது என்பது எங்களுக்கு தெரியாது என்றார். தாங்கள் மருதாடு கிராமத்தில் உள்ள ஏடிசி காலனி பகுதியில் வசித்து வருகிறோம்; ஆனால் இதுகுறித்த தகவல் எங்களுக்கு வழங்கப்படவில்லை என குறிப்பிட்டார். அரை கிலோமீட்டர் தொலைவில் உள்ள எம்.ஜி.ஆர் நகர் பகுதியும் ஒரு காலனி தான்; அவர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்படவில்லை என்றார். இது என்ன கூட்டம் என்று எங்களுக்கு தெரியவில்லை; கூட்டம் நடைபெற உள்ளது என்பதை வெளியே வைக்கப்பட்டிருந்த பேனரை பார்த்த பின்னரே அறிந்தோம் என்றார். எங்களுக்கு ஏன் தகவல் தெரிவிக்கப்படவில்லை? நாங்கள் மனிதர்கள் இல்லையா? எங்களுக்கு விவசாய நிலங்கள் இல்லையா? என்று கேள்வி எழுப்பினார். சுற்றிலும் 10 முதல் 15 ஏக்கர் வரை பஞ்சமி நிலங்கள் உள்ளன; அவற்றிற்கு மோட்டரும் கிணறும் இல்லை என்றார். "வானம் பார்த்த பூமி" என குறிப்பிட்டார். இங்கு குவாரி அமைந்தால் விவசாயம் எவ்வாறு செய்வது? என்று வினவினார். இங்கு குவாரி ஆரம்பித்தால் வேர்க்கடலை, கேழ்வரகு போன்ற பயிர்கள் வைத்து எப்படி முன்னேற முடியும்? இதுகுறித்து எங்களுக்கு தகவல் சொல்ல வேண்டாமா? என்று கேட்டார். கல்லாங்குத்து பள்ளி சாலை திருப்புமுனையில் உள்ளது; குழந்தைகள் பள்ளிக்கு

எப்படி செல்ல முடியும்? அது ஒரு சிறிய சாலை; பாதுகாப்பாக இருக்குமா? என்று வினவினார். பைபாஸ் சாலை அமைத்த பிறகு அந்த சாலையில் 10 விபத்துகள் நடந்துள்ளன; 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்றார். இந்த குவாரி வாகனங்கள் ஒரு நாளுக்கு ஆயிரம் முறை சென்று வருவதாக இருந்தால், எங்களுக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்படும்? என்று கேள்வி எழுப்பினார். இந்த குவாரி அமைந்தால் நிலத்தடி நீரும் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படும் என்றார். இந்த குவாரி அவசியமில்லை; இதனால் யாரும் ஒன்றும் பிழைக்கப் போவதில்லை; யாருக்கும் நிலையான வருமானம் இல்லை என்றார். வருங்கால சந்ததியினர் பாதிக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டார்."நாங்கள் எப்படி இருந்தாலும் பரவாயில்லை; எங்கள் வருங்கால சந்ததியினர் நன்றாக இருக்க வேண்டும். எங்களுக்கு இந்த குவாரி தேவையில்லை. இதனை மீறி அமைக்கப்பட்டால் எங்களால் முடிந்த போராட்டத்தை மேற்கொள்வோம்" என்று தெரிவித்தார்.

8. திரு. லட்சுமணன், புன்னை கிராமம்:

திரு. லட்சுமணன் அவர்கள் கூறுகையில், நாங்கள் முழுமையாக விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகிறோம்; காலை சூரியன் உதயமானதிலிருந்து மறையும் வரை விவசாயமே எங்கள் உயிர்மூச்சு என்றார். இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு தனது வணக்கத்தை தெரிவித்தார். எங்கள் தொழில் விவசாயம் தான். மருதாடு, மாமதுரைக்கு சமமான வளமான ஊராகும். மருதாடு ஒரு வளமான நதிக்கரைப் பகுதி; சிறிய அளவு மாசு ஏற்பட்டாலும் மக்கள் மனம் வருந்துவார்கள் என்றார். இந்த பகுதியில் கல்குவாரிக்கு யார் அனுமதி கேட்டது என்பது எங்களுக்கு தெரியவில்லை. இதை கவனிக்காமல் இருந்ததே எங்கள் தவறு என்றும் குறிப்பிட்டார். மாசு காரணமாக உயிர்சேதம் ஏற்பட்டால் அதனால் நாம் தான் பாதிக்கப்படுகிறோம் என்றார். மனித உயிர் பாதிக்கப்படும் போது மனம் கலங்குகிறது. பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் மீது

கற்கள் விழும் அபாயம் உள்ளது; அந்த கற்கள் எப்படி, எப்போது விழும் என்பது தெரியாது என்றார். இதனால் கல்குவாரி தேவையா? என்று வினவினார். பல குழந்தைகள் உயிரிழக்கும் அபாயம் உள்ளது என்றார். இப்படிப்பட்ட மருதாடு போன்ற ஊரில் மாசு இருக்கக் கூடாது; இந்த குவாரி இருக்கக் கூடாது என்றார். ஏற்கனவே பல உயிர்களை இழந்துள்ளோம்; இதனால் மனம் கலங்குகிறது என்றார். இத்திட்டம் தேவையா? என்று வினவினார். இங்கு அமர்ந்திருக்கும் நீங்கள் சொல்லுங்கள்; ஒருவர் கைதட்டினால் ஓசை வராது, 100 பேர் சேர்ந்து கைதட்டினால் தான் ஓசை வரும் என்றார். ஆரம்பத்தில் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டன; "இது செய்கிறோம், அது செய்கிறோம்" என்று கூறப்பட்டாலும் அவை நடைமுறையில் செயல்படுத்தப்படவில்லை என்றார். எனவே, மருதாடு கிராமத்திற்கு இந்த குவாரி தேவையில்லை என்று தெரிவித்தார்.

9. திரு. எம்.டி. ராதாகிருஷ்ணன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், மருதாடு கிராமம்:

திரு. எம்.டி. ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுகையில், நான் மருதாடு ஊராட்சி முன்னாள் தலைவர். 1986 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து சுமார் 35 ஆண்டுகள் தலைவராக பணியாற்றி இருக்கிறேன். பஞ்சாயத்து கலைக்கப்பட்ட பிறகும் துணைத் தலைவராக இருந்துள்ளேன். எனது மனைவி இரண்டு முறை ஒன்றிய கவுன்சிலராக பணியாற்றியுள்ளார். இந்த கிராமத்தில் ஒவ்வொரு இடத்திலும் உள்ள குறை, நிறைகளை நான் நன்கு அறிந்தவன். சிறுவயதிலிருந்தே இந்த கிராமத்தின் நிர்வாகத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்ததன் அடிப்படையில் பேசுகிறேன். இப்போது அருமை சகோதரர்கள் (முன்பு பேசியவர்கள்) முன்வைத்த சில கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையாக உள்ளன. அவற்றிற்கு தேவையான மாற்று ஏற்பாடுகள் செய்யலாம். அதே சமயம், நமக்கு குவாரி அவசியம் தேவைப்படுகிறது. காரணம், வீடு கட்டுவதற்கோ, சாலை அமைப்பதற்கோ, அல்லது பிற கட்டிட வசதிகள் செய்ய வேண்டிய பொருட்களை பெற நாம் நீண்ட தூரம்

செல்ல வேண்டியுள்ளது. இதனால் அதிக செலவும், கால தாமதமும் ஏற்படுகிறது. அந்த சிரமத்தை தவிர்க்க உள்ளூரிலேயே கிடைப்பது ஒரு முக்கிய அம்சம். மேலும், இந்த குவாரி சுமார் 1.5 ஆண்டாக செயல்பட்டு வருகிறது. இதுவரை எந்தவித குறையும் மக்கள் என்னிடம் தெரிவிக்கவில்லை. எனக்குத் தெரிந்த வரையில் பெரிய பாதிப்புகள் எதுவும் ஏற்பட்டதாக தெரியவில்லை. குவாரி நடைபெறும் பகுதியில் சுமார் பத்து ஏக்கர் நிலம் எனது சொந்த நிலமாக இருந்தது; அதை நான் வழங்கியுள்ளேன். அது முழுக்க முழுக்க புஞ்சை நிலம். அருகில் விவசாய நிலங்களும் உள்ளன. கல்லாங்குத்து, காவேரிப்பாக்கம் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கும் அப்பகுதியில் நிலங்கள் உள்ளன. இருப்பினும், இதுவரை குறிப்பிடத்தக்க பாதிப்பு ஏற்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் மக்கள் முன்வைக்கும் கருத்துகளை கவனத்தில் கொள்ள வேண்டும். குவாரி தொழிலின் தன்மை என்ன, அது எவ்வாறு செயல்படுகிறது என்பதை விளக்க வேண்டும். போக்குவரத்து ஒழுங்கு, வெடிப்பு ஒலி அளவு குறைத்தல், தூசி கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் செயல்பட வேண்டும் என்று குவாரி நடத்துபவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். பொது மக்களாக நாம் முன்வைத்த கோரிக்கைகளை மறுபரிசீலனை செய்து, அனைவருக்கும் ஏற்ற முடிவை எடுக்க வேண்டும் என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாய்ப்பை வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

10. திருமதி. சுமதி, மதிமங்கலம் கிராமம்:

திருமதி. சுமதி அவர்கள் கூறுகையில், தாம் மதிமங்கலம் காலனியில் இருந்து வந்துள்ளதாக தெரிவித்தார். இப்போது அனைவரும் கல்குவாரி வேண்டாம் என்று கூறுகின்றீர்கள்; ஆனால் கல்குவாரி இருந்தால் எங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றார். பக்கத்திலேயே வேலைவாய்ப்பு கிடைப்பதால், நான்கு

கிலோமீட்டர் தூரம் சென்று வேலை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது என்றார். வேலைவாய்ப்புக்காக கல்குவாரி தேவையுள்ளது என்றும் தெரிவித்தார்.

(இவர் கருத்திற்கு எதிராக பொதுமக்களிடமிருந்து எதிர்ப்பு கருத்தாக சலசலப்பு ஏற்பட்டது. ஆகையால் உதவி பொறியாளர் அவர்கள், பொதுமக்கள் தங்கள் கருத்துகளை தெரிவிக்க விரும்பினால் தாமாக முன்வந்து தெரிவிக்கலாம்; மற்றவர்கள் கருத்து தெரிவிக்கும் போது யாரும் குறுக்கீடு செய்ய வேண்டாம் என்று தெரிவித்தார்).

இதனைத் தொடர்ந்து, திருமதி. சுமதி அவர்கள் கூறுகையில், வீடு கட்டுவதற்கு மணல் தேவை இல்லையா? மணல் இல்லாமல் வீடு கட்டுகிறீர்களா? விரும்பினால் ஏதாவது ஒரு குவாரியிலிருந்து தான் எடுத்து வருகிறீர்கள். அது நம் பக்கத்தில் இருந்து கிடைக்கிறது என நினைத்துக் கொள்ளுங்கள். எனவே, இந்த குவாரி எனக்கு வேண்டும் என்று தெரிவித்தார்.

அதன் பின்னர், பொதுமக்கள் தரப்பில் இருந்து கருத்து தெரிவிக்க யாரும் முன்வரவில்லை.

பொது மக்கள் தொடர்ந்து கருத்துக்களை தெரிவிக்க முன் வராததால் சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தினை நிறைவுசெய்திட கூறியதனை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். R. அருள், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக 09 மனுக்கள் பெறப்பட்டுள்ளது, மின்னஞ்சல் மூலமாகவும் மற்றும் நேரடியாகவும்

17

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை, அலுவலகத்திற்கு மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

A. Jothiprakash 6/3/26
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவண்ணாமலை.

6/3/26
சார் ஆட்சியர்,
செய்யாறு கோட்டம்,
திருவண்ணாமலை .

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவண்ணாமலை.